| | | | |
|---|---|---|---|
| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | | |
| | மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)<br>Third Term Exam 2022 (2023) | | 33 T I |
| | வரலாறு i<br>History i | தரம் 10<br>Grade 10 | நேரம் 1 மணி<br>Time 1 Hours |

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள (1) (2) (3) (4) என்ற விடைகளுள் சரியானதும் மிகவும் பொருத்தமானதுமான விடையினைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்படும் விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள கட்டங்களில் நீங்கள் தெரிவு செய்த விடையின் இலக்கத்திற்கு பொருத்தமான கட்டத்திற்கு புள்ளடி இடுக.**

## பகுதி I

1) மகாவம்ச நூலின் சில பகுதிகளுக்கு மேலும் விளக்கமளிக்கும் வகையில் எழுதப்பட்ட உரை நூல்
   1. சிஹல அட்டகதா
   2. உத்தர விஹார அட்டகதா
   3. வம்சத்தப்பகாசினி
   4. வினய அட்டகதா

2) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் வரலாற்று மூலாதாரங்களுடன் தொடர்புடைய கூற்றாக அமைவது எது?
   1. கி.பி 6 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தீபவம்சம் தேசிய இலக்கிய மூலாதாரங்களில் மிகவும் பழைமை வாய்ந்த நூலாகும்.
   2. அரிஸ்டோட்டிலின் இண்டிகா என்ற நூல் வெளிநாட்டு இலக்கிய மூலாதாரமாக முக்கியத்துவம் பெறுகின்றது.
   3. வரலாற்று தகவல்கள் மிகவும் சுருக்கமாக காட்டப்படுவதும் மீளுருவாக்கும் போது ஏற்படும் பிழைகள் ராஜாவலியில் காணக் கூடிய பலவீனமாக காணப்படுகின்றது.
   4. முதலாம் விஜயபாகு மன்னனின் பனாகடுவ செப்பு சாசனம் தேசிய தொல் பொருள் மூலாதாரங்களுக்கிடையில் முக்கியமானதாக விமர்சிக்கப்படுகின்றது.

3) முன் வரலாற்றுக்கால மனிதன் வாழ்ந்ததாக கூறப்படும் சீகிரிய பொத்தான எவ் வகைக்குள் அடங்குகின்றது?
   1. தாழ்நில உரல்வலயக் குகைகள்
   2. ஈரவலய வெட்டவெளிகள்
   3. தாழ்நில ஈரவலயக் குகைகள்
   4. மலையகப் பிரதேச வெட்டவெளி

4) கற்காலத்தில் நிலவிய மரணச்சடங்கு தொடர்பான தகவல்களை அறியும் போது எலும்புக்கூடுகள் வளைத்துப் புதைக்கப்பட்ட இடமாகக் கருதப்படுவது
   1. இராவண எல்ல
   2. பாகியன்கல
   3. குருவிட்ட பட்டதொம்பலென
   4. கித்துள்கல பெலிலென

5) ஹொலோசீன்யுகம் என அழைக்கப்படும் அண்மைக்கால புவியியல் மாற்றத்தின் மத்தியை மையமாக கருதப்படும் காலப்பகுதி எது?
   1. கி.மு 7000 - 4500
   2. கி.மு 700 - 450
   3. கி.மு 2400 - 1800
   4. கி.மு 450 – கி.பி 300



kalvi.lk

6) முற்காலத்தில் “ பரிகித்தகம” என்று அழைக்கப்பட்டது
   1. வர்த்தகக் கிராமங்கள்
   2. வேலியினால் பாதுகாக்கப்பட்ட கிராமங்கள்
   3. மக்களால் கைவிடப்பட்ட கிராமங்கள்
   4. துறைமுகங்களை அண்மித்த கிராமங்கள்

- கீழே காணப்படும் வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு 7ஆம் , 8ஆம் வினாக்களுக்கு விடை தருக.

  A- போரின் மூலம் சோழ ஆட்சியாளர்களை தோல்வியடையச் செய்து நாட்டை ஒன்று படுத்தியமை

  B- அரசின் வரி அறவிடுதலை ஒரு ஒழுங்குமுறையின் கீழ் ஆட்சிப் பகுதிகளைப் பிரித்து நிர்வாகத்தினை முறைப்படுத்தியமை.

  C- வரலாற்றில் முதலாவது ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட போருக்கு தலைமை தாங்கியமை

  D- அரச பாதுகாவலருக்கு நன்றிக்கடன் செலுத்துதல் தொடர்பானவற்றை குறிப்பிட்டு பனாகடுவ செப்பு சாசனம் எழுதப்பட்டது.

  E- பன்முகப்படுத்தப்பட்டிருந்த இலங்கையின் அரசியல் அதிகாரத்தை ஒன்றுபடச் செய்தமை.

7) விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலத்துடன் தொட்புபட்ட நிகழ்வுகள் காணப்படும் விடைகளாக அமைவது.

   1. A மற்றும் D     2. B மற்றும் D     3. C மற்றும் D     4. A மற்றும் C

8) துட்டகைமுனு மன்னனின் ஆட்சிக்காலத்துடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் காணப்படும் விடையாக அமைவது,

   1. A மற்றும் E     2. B மற்றும் E     3. B மற்றும் C     4. C மற்றும் E

9) ‘‘மன்னனின் செயற்பாடுகள் மற்றும் அரசர்கள் தோற்றம் பெற்ற விதத்தின் அடிப்படையில் அரச கோட்பாடுகள் அமையப் பெற்றுள்ளன மின்னேரித்தெய்வம்,அலகபய மகாராஜா சக்கரவர்த்தி போன்றவற்றுடன் தொடர்புடைய மன்னர்களை முறையாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
   1. காசியப்பன், நிஸ்ஸங்கமல்ல மன்னன், மகாசேனன்
   2. மகாசேனன் , குட்டகண்ண அபயமன்னன், நிஸ்ஸங்கமல்ல மன்னன்
   3. மகாசேனன், காசியப்பன் , நிஸ்ஸங்கமல்லமன்னன்
   4. வசபன், காசியப்பன், மகாபராக்கிரமபாகு

10) கீழே A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகள் இடம்பெற்ற ஆட்சிக்காலங்களின் படி அம் மன்னர்களை ஒழுங்குமுறையாக காட்டப்படும் விடையாக அமைவது

   A- கலிங்க தேசத்தின் அரசியினை திருமணம் செய்ததுடன் தனது சகோதரியை பாண்டிய இளவரசனுக்கு திருமணம் செய்து கொடுத்த மன்னன்

   B – சீன நாட்டுடனான வெளிநாட்டுத் தொடர்புகள் மிகவும் உறுதி பெற்றதுடன் இராஜதந்திர தூதுவ பயணங்கள் மேற்கொண்டமை.

   C- இந்தியாவின் சேர நாட்டின் பத்தினி தெய்வத்தின் திறப்புவிழாவிற்குச் சென்று அதில் பங்குபற்றிய மன்னன்.

   D- கர்ப்பிணித் தாய்மார்களின் தேவைக்காக பிரசவ விடுதியினை நிறுவிய மன்னன்

   1. முதலாம் விஜயபாகு, முதலாம் அக்போ,முதலாம் கஜபாகு,முதலாம் மகிந்த
   2. முதலாம் விஜயபாகு, ஆறாம் அக்போ , முதலாம் கஜபாகு, முதலாம் உபதிஸ்ஸ மன்னன்
   3. முதலாம் விஜயபாகு, பாதிகாபய மன்னன், முதலாம் கஜபாகு, நான்காம் காசியப்பன்
   4. மூன்றாம் விஜயபாகு, ஆறாம் அக்போ, முதலாம் கஜபாகு, புத்ததாச மன்னன்



kalvi.lk

11) கெதிட அட, கெடுகனக போன்ற வரிகளை நீக்கிய மன்னன்
1. நிஸ்ஸங்கமல்ல மன்னன்
2. முதலாம் உபதிஸ்ஸ மன்னன்
3. நான்காம் உதய மன்னன்
4. நான்காம் காசியப்ப மன்னன்

12) முற்காலத்தில் பல வகையான கைத்தொழில்களில் ஈடுபட்ட கலைஞர்கள் அட்டவணை I லும் அதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள் அட்டவணை II இலும் காட்டப்பட்டுள்ளன. அட்டவணை I உடன் IIஐ பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

| அட்டவணை I | அட்டவணை II |
|---|---|
| துலதர சுமண | A முதுகல்ல |
| தடிக | B வெஹரகெம கல்வெட்டு |
| கபர | C மண்டகல கல்வெட்டு |
| ததவய | D வேகிரிய தேவாலயக்கல்வெட்டு |

1. C D B A  2. A D C B  3. D B A C  4. C D A B

13) கீழே காணப்படும் கூற்றுகளுள் பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.
1. தென் பகுதியில் காணப்படும் போவத்தேகல எனும் இடத்தில் உள்ள கல்வெட்டில் "காம்போஜ மாஹா புகிய" என குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.
2. பௌத்த பிக்குகளின் தலைவர்களுடன் நெருங்கி வாழந்த மாணவப் பிக்குகள் "சதிவிஹகரிய" என்ற பெயரில் அழைக்கப்பட்னர்.
3. அனுராதபுரம் மற்றும் அதை அண்மித்து வசித்த தமிழ் மக்களின் நலன்புரி செயற்பாடுகளில் கவனம் செலுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி"தமெட" என அழைக்கப்பட்டனர்.
4. கி.பி 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தேசசஞ்சாரி கொஸ்மொஸ் இண்டிகொப்லேடஸ் அநுராதபுரத்தில் வாழ்ந்த பாரசீக வியாபாரிகள் பற்றிக் கூறியுள்ளார்.

14) உலர் வலயப் பிரதேசங்களில் குடிநீரின் தரத்தை பேணிக் கொள்வதற்காக உருவாக்கிக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப முறைக்கு உதாரணமாக அமைவது
1. ஊராகொட கிணறு
2. தெடிகம யானை விளக்கு
3. சீகிரிய நீர்ப்பூங்கா
4. பழைய குளக்கட்டு

- கீழே காணப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 15 மற்றும் 16 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A- நீரின் அலைச் செயற்பாட்டின் அளவினை அறிந்து கொள்ளல்
B- இயற்கையாகவே அமைந்த இரு குன்றுகளுக்கிடையில் பாறைத் தொடர்களைத் தொடுக்கும் இடத்தை தெரிவு செய்தல்.
C – பாரிய அளவில் பரந்து காணப்படும் நீரின் அளவினை கவனமாக வெளியேற்றல்
D- நீரினை வெளியேற்றும் போது குறைவான அமுக்கத்துடன் வெளியில் கொண்டு செல்லப்படல்.
E- கிடையாக சதுரவடிவில் கல்லினால் அமைக்கப்பட்ட இடம்

15) மடைக்கதவுடன் தொடர்புடைய கூற்றாக அமையும் விடையினைத் தெரிவு செய்க.
1. D யும் E யும்  2. A யும் E யும்
3. D யும் B யும்  4. E யும் B யும்



kalvi.lk

16) குளக்கட்டு மற்றும் அலைதாங்கி என்பவற்றுடன் தொடர்புடைய தகவல்களைக் காட்டும் விடையானது முறையே

1. A யும் E யும்  2. B யும் A யும்
3. B யும் C யும்  4. D யும் B யும்

17) மாசக்க, அக்க , தரண என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுபவை எதனை அளப்பதற்காக பயன்படுத்தப்பட்டது?

1. காலத்தை அளப்பதற்காக  2. இடத்தினை அளப்பதற்காக
3. தூரத்தை அளப்பதற்காக  4. நிறையினை அளப்பதற்காக

18) சப்ரகமுவ மாகாணத்தில் உரிய பல்லேபெத்த கல்பாய பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் ஆதாரங்களினால் காட்டப்படும் விடயமாக அமைவது

1. முற்கால இனத்தவரின் வசிப்பிட அமைப்பின் தொழினுட்ப தன்மை.
2. பழைய கலைஞர்களின் ஆபரணங்கள் தயாரிக்கும் தொழினுட்பம்.
3. முற்கால மக்களினால் மேற்கொள்ளப்பட்ட கடவுள் வணக்க செயற்பாடுகளுக்கான ஆதாரங்கள்.
4. பழைய இரும்புருக்கு தொழினுட்பம் தொடர்பானவர்களோடு ஈடுபட்டவர்களிடம் காணப்பட்ட அறிவு.

19) பழைய கல்வெட்டுக்களில் “குடீன்” என்ற பெயரில் அழைக்கப்பட்டவர்.

1. மாலுமிகள்  2. சாதாரணமக்கள்
3. கால்நடைகள் மேய்ப்பவர்கள்  4. வேட்டையாடுபவர்கள்

- கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் A யிலிருந்து F வரையான தகவல்களின் அடிப்படையில் 20,21 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| மன்னர்கள் | கல்வெட்டுக்கள் |
|---|---|
| A- நான்காம் உதயமன்னன் | D – சித்துல் பவ்வ கல்வெட்டு |
| B- நான்காம் மகிந்தன் | E – சொரபொரவெவக் கல்வெட்டு |
| C – முதலாம் கஜபாகு | F – வேவல்கெட்டிய கல்வெட்டு |

20) களவு, கொலை போன்ற குற்றங்களுக்கு வழங்க வேண்டிய தண்டனைகளையும் அதற்கு தீர்ப்பளித்த மன்னனையும் தொடர்புபடுத்தும் போது அமையும் சரியான விடை

1. B யும் D யும்  2. A யும் F யும்
3. B யும் F யும்  4. C யும் D யும்

21) நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட அபராதப் பணம் விகாரையில் வாழ்ந்த பௌத்த பிக்குகளின் தேவையின் பொருட்டு வழங்கப்படவேண்டும் என கட்டளையிட்ட மன்னனையும் அது குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டினையும் காட்டுவது.

1. C யும் D யும்  2. A யும் D யும்
3. C யும் E யும்  4. B யும் E யும்

22) அசோக மாலா , துட்டகைமுனு மன்னனின் மாளிகையில் சுவையான உணவைத் தயாரித்தது அனைவரது மனத்தையும் கவர்ந்தது என்பதைக் காட்டும் இலக்கிய மூலாதாரமாக அமைவது,

1. சத்தர்மாலங்கார  2. ரசவாஹினி
3. தம்பியா அட்டுவா  4. சஹஸ்சவத் தூப்பரணய



kalvi.lk

23) A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளை முறையாக ஒழுங்குபடுத்தும் போது சரியான விடையாக அமைவது

A 1. சப்புமல் குமாரன் ஜயபாகு மன்னனை கொலை செய்து அரசாட்சியை பெற்றுக்கொண்டான்.

B 2. சந்திரபானு எனும் பெயருடைய (ஜாவக) ஆக்கிரமிப்பாளர்கள் பாரிய இராணுவத்தினை வரவழைத்து இந்நாட்டை ஆக்கிரமிப்புச்செய்தல்.

C 3. சீனாவில் யுங்லோ எனும் பேரரசனால் அனுப்பப்பட்ட செங்ஹோ எனும் தளபதி இலங்கை வந்தமை.

D 4. வெளிநாட்டு வியாபாரத் தொடர்புகளை கடினமாக்கும் நோக்கில் எகிப்தின் சுல்தானுக்கு தூதுக்குழு ஒன்றை அனுப்புதல்.

E 5. பெலிகலையில் தலதாமாளிகை அமைத்து புனித சின்னங்களைக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தமை.

1. E,B,D,C,A
2. A,E,D,B,C
3. E,C,D,B,A
4. E,B,C,A,D

24) கி.பி 1505 இல் போர்த்துக்கேயர்கள் இந்நாட்டுக்கு வருகை தரும் போது இந்நாட்டில் எம் மன்னனின் ஆட்சிக்காலம் காணப்பட்டது?

1. 6ம் பராக்கிரமபாகு
2. 6ம் புவனேகபாகு
3. 8ம் பராக்கிரமபாகு
4. 3ம் விக்கிரமபாகு

25) பாண்டிய மற்றும் கம்பூச்சிய கலைப் பாரம்பரியப் பண்புகளைப் பிரதிபலிக்கும் நிர்மாண அமைப்புக்களுக்கு உதாரணமாக அமையும் விடையினைத் தெரிவு செய்க.

1. கடலாதெனிய மற்றும் லங்கா திலக சிலைமனை
2. யாப்பகுவ பியகெடபெல மற்றும் தூண்கள்
3. எம்பக்க தேவாலயம்
4. கோட்டை சிவ தேவாலயம்

Education கல்வி අධ්‍යාපන

26) சத்தர்மாலங்கார, பூஜாவலிய மற்றும் கவிசிலுமின ஆகிய நூல்கள் எழுதப்பட்ட இராசதானிக்காலங்களை முறையே குறிப்பிடும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது

1. குருணாகல், கம்பளை, தம்பதெனியா
2. குருணாகல், கம்பளை, யாப்பகுவ
3. கம்பளை, கோட்டை, தம்பதெனியா
4. கம்பளை, குருணாகல், தம்பதெனியா

27) கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு முதலாம் விமலதர்ம சூரிய மன்னனுக்கு மாத்திரம் பொருத்தமாக அமையும் விடையினைத் தெரிவு செய்க

A- கண்ணொறுவையில் போர்த்துக்கேயர்களை தோல்வியடையச் செய்தல். (குருமாரை)

B- பர்மாவிலிருந்து குருமாரை வரவழைத்து உபசம்பதா விழாவினை மேற்கொண்டமை.

C- தெல்கமுவ விகாரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த புனித தந்தத்தை கண்டியில் பிரதிஷ்டை செய்தமை.

D- வெலிவிட்ட சரணங்கர தேரருக்கு பதவியினை வழங்குதல்.

E- தந்துரைப் போரில் போர்த்துக்கேயரை தோல்விடையச் செய்தமை

1. B ,C மற்றும் E
2. B ,C மற்றும் D
3. A ,C மற்றும் E
4. A ,Bமற்றும் C



kalvi.lk

28) கண்டி இராச்சியத்தில் "குருவே பத்த" என அழைக்கப்பட்ட படையணிக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்புக்களாக அமைவது

1. துணி நெய்தல்
2. யானைகள் பிடித்தல்
3. போக்குவரத்து
4. பானைகள் செய்தல்

29) மலைநாட்டு ஆட்சியாளர்களுக்கும் போர்த்துக்கேயர்களுக்குமிடையில் போர்கள் ஏற்பட்ட இடங்கள் முதலாம் பகுதியிலும் அப்போர்களுக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய தலைவர்கள் இரண்டாம் பகுதியிலும் காட்டப்பட்டுள்ளன. இவற்றை முறையாக ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடையாக அமைவது

| 1ம் பகுதி | 1ம் பகுதி |
|---|---|
| 1. தந்துறைப்போர் | A- தியோகோ த மெல்லோ |
| 2. பலனைப்போர் | B- கொன்ஸ்தாந்தினு த சா |
| 3. ரந்தெனிவெலப்போர் | C- ஜெரணிமோ அசவேது |
| 4. கண்ணொறுவப்போர் | D- ஜெரோ லோபேஸ்த சூ சோ |

1. C,D,B,A  2. D,C,B,A  3. D,B,A,C  4. D,A,B,C

30) நாயக்க அரச வம்சத்தின் முதல் மன்னனாக கருதப்படுபவன்

1. ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன்
2. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
3. ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன்
4. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

Education கல்வி அධ්‍යාපන

31) மகா அதிகாரத்தின் கீழ் மாத்திரம் நிர்வாகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் அடங்கிய விடையாக அமைவது.

1. சப்ரகமுவ , பிந்தென்ன, புலத்கம
2. கொத்மலை, உடுநுவர , மகாகோறளை
3. அத்கோரலய ,வலப்பனை, தும்பனே
4. வெல்லஸ்ஸ ,மாத்தளை, பிந்தென்ன

32) தான் வாழும் காலத்தில் தன்னுடைய பேரனாகிய தர்மபாலாவின் சிலையினை போரத்துக்கேயர்களுக்கு அனுப்பி முடிசூடச் செய்த மன்னன் யார்?

1. எட்டாம் பராக்கிரமபாகு மன்னன்
2. ஆறாம் விஜயபாகு
3. ஏழாம் புவனேகபாகு மன்னன்
4. மாயாதுன்னை மன்னன்

- கீழ்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 33 மற்றும் 34 ஆம் வினாக்களுக்கு விடை தருக?

A –முல்லேரியா என்னும் இடத்தில் ஏற்பட்ட கடும்போரில் போர்த்துக்கேயரை தோல்வியடையச் செய்தமை.

B- ஒல்லாந்த தூதுவராக ஜோரிஸ் வான் ஸ்பில் பேர்ஜன் இலங்கை வந்து 1ம் விமலதர்மசூரிய மன்னனை சந்தித்தமை

C- 1766 ஒப்பந்தத்தினை காரணமாகக் கொண்டு மலைநாட்டு இராசதானிக்கு கரையோரப்பகுதிகள் கைநழுவியமை

D- ஒல்லாந்த கடற்படையின் அதிகாரியான வேஸ்டர் வோல்டினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் போர்த்துக்கேயர் கோட்டைக்கு தாக்குதல் மேற்கொள்ளல்

E- கண்ணொறுவப் போரில் போர்த்துக்கேயர்களுக்கு படுதோல்வியினை ஏற்படுத்தல்.



kalvi.lk

33) மேலுள்ள கூற்றுக்களில் இரண்டாம் இராஜசிங்க மன்னனின் காலத்துடன் தொடர்புடைய விடயங்களடங்கிய விடையினைத் தெரிவு செய்க.

1. B யும் E உம் | 2. A யும் E உம்
3. Dயும் E உம் | 4. B யும் E உம்

34) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் காலத்துடன் தொடர்புபட்ட விடயங்களை மாத்திரம் அடங்கிய விடையாக அமைவது

1. C 2. A 3. B 4. D

35) ''நாங்கள் கிறிஸ்தவர்களையும் வாசனைப் பொருள்களையும் தேடி இங்கு வந்துள்ளோம்'' என்ற கூற்றினைக் கூறியவர்

1. லோரன்ஸ் சோ த அல்மேதா
2. வாஸ்கொடகாமா
3. கடலோடி ஹென்றி
4. கிறிஸ்டோபர் கொலம்பஸ்

36) மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியின் விளைவாக திருச்சபையில் இருந்த குறைபாடுகளை விமர்சனத்திற்கு உள்ளாக்கியவர்களில் அடங்காதவர்

1. மார்ட்டின் லூதர் | 2. பிரான்சிஸ் பேகன்
3. ஜோன் ஹஸ் | 4. ஜோன் வைக்கிளிப்

37) முதன் முதலில் மறுமலர்ச்சி இத்தாலியில் எந்நகரத்தில் ஆரம்பமானது?

1. ஜெனோவா | 2. உரோம்
3. வெனிஸ் | 4. புளோரன்ஸ்

38) லியானாடோடாவின்சியினால் உருவாக்கப்பட்ட உலகப் புகழ்பெற்ற கலைப்படைப்பாக அமைவது

1. இறுதித் தீர்ப்பு | 2. பியெட்டாசிலை
3.இயேசுநாதரின் இறுதி இராப்போசனம் | 4. மெடிசியின் உருவம்

39) நாடுகாண் பயணத்தை மேற்கொள்வதற்காக முதன்முதலில் ஆர்வம் காட்டிய இரண்டு நாடுகளாவன

1. போர்த்துக்கல், ஸ்பானியா | 2. பிரான்ஸ்,இத்தாலி
3. பிரித்தானியா, இத்தாலி | 4. ஒல்லாந்து ,பிரான்ஸ்

40) நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

1. கலிலியோ கலிலி | 2. ஜொஹென்ஸ் கெப்லர்
3. நிக்கலஸ் கொப்பனிக்கஸ் | 4. ஜொஹேன்ஸ் கூடன் பேர்க்

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

| | | |
|---|---|---|
| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
| | மூன்றாம் தவணைப் பரீட்சை- 2022 (2023)<br>Third Term Exam - 2022 (2023) | 33 T II |
| | வரலாறு ii<br>History ii — தரம் 10<br>Grade 10 | நேரம் 3 மணித்தியாலம்<br>Time 3 Hours |

- பகுதி I கட்டயமானது.
- பகுதி II இல் ஏதாவது நான்கு வினாக்களும்
- பகுதி III இல் ஒரு வினாவுமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி I

1. அ)(i) கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக?

தெதுறு ஓயா, கம்பளை, யாழ்ப்பாணம், பாகியன் கல, மாதோட்ட , தேவநகர, கலாவாவி, நெடுந்தீவு, பொலன்னறுவை, கல்லோயா, காலாதித்த, மாணிக்ககங்கை

(12புள்ளிகள்)

(ii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தரப்பட்டுள்ள உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக?

மாலைதீவுகள், சீனா, சீயம், செங்கடல், ஒல்லாந்து, கொன்ஸ்தாந்திநோபிள்

( 6 புள்ளிகள்)

ஆ) (i) கீழே A,B,C,D யினால் காட்டப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுக்கான விடையினை உங்கள் விடைத்தாளில் எழுதுக?

A – நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா என்ற நூலினை எழுதியவர்

B – கி.பி 850 இல் சிவனொளிபாத மலையினை வணங்கிய நாடுகாண் பயணி

C- ரந்தெனிவெல, கண்ணொறுவப் போர்களின் போது போர்த்துக்கேயரை தோல்வியடையச் செய்த மன்னன்

D- கனடாவினைக் கண்டு பிடித்த நாடுகாண்பயணி

( 4 புள்ளிகள்)

(ii)



1. படத்தில் காட்டப்படுவது எது?
2. இது கண்டுபிடிக்கப்பட்ட மாகாணம் மற்றும் பிரதேசத்தினைக் குறிப்பிடுக?
3. இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள சக்தியின் தன்மை எது?
4. இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள் எவ் இராசயனப் பெயர்களால் அழைக்கப்படுகின்றன? ( 4 புள்ளிகள்)



kalvi.lk

(iii)



1. இப்படத்தில் காட்டப்படும் உபகரணம் யாது?
2. இதில் காணப்படுபவர் எவ் இனத்தைச் சேர்ந்தவர்?
3. இவர் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகின்றார்?
4. இவர் கண்டுபிடித்த புதிய விசேட கண்டுபிடிப்பு யாது?

( 4 புள்ளிகள்)

## பகுதி II

2. (i) கீழே காணப்படும் வரலாற்றுக்கு முற்பட்ட கால இடங்களுக்கான சுற்றாடல் வலயங்களைப் பெயரிடுக?

A – கதிரமலை

B – பாகியன்கல

C அத்தனகொட அலுலென ( 3 புள்ளிகள்)

(ii) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்டகால வெப்பமான காலநிலை நிலவும் காலங்களில் வெட்டவெளிகளில் வாழ்ந்தான் என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

கீழே காணப்படும் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இரண்டு இடங்களைக் குறிப்பிடுக?

A – கரையோர வெட்ட வெளிகள்

B – மலைகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலம் (4 புள்ளிகள்)

(iii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தினை அடிப்படையாக கொண்டு கீழ்வரும் விடயங்களினை உதாரணத்துடன் விளக்குக.

1. வாழ்க்கைமுறை
2. உணவுமுறை
3. தொழினுட்பம்
4. மரணச்சடங்கு

( 5 புள்ளிகள்)

(iv) வரலாற்றுக் காலக் குடியிருப்புகளின் அமைப்பு முறையினையும் அதன் தன்மைகளையும் மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக?

( 6 புள்ளிகள்)

3. (i) கீழே காணப்படும் வரலாற்று நிகழ்வுகளை உறுதிப்படுத்தக்கூடிய மூலாதாரத்தினைக் குறிப்பிடுக

A – அசோக மன்னனால் இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பஞ்ச வஸ்துக்களைப் பயன்படுத்தி தேவநம்பியதிஸ்ஸ மன்னன் இரண்டாவது முறையாக முடி சூட்டிக் கொண்டமை.

B- நாகதீப என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை ரிஷிகிரி என்ற அமைச்சர் நிர்வகித்தமை.

C – கிராமங்களில் வாழ்ந்த தலைவர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாகச் செயற்பட்டமை. ( 3 புள்ளிகள்)



kalvi.lk

(ii) இலங்கையின் அரசியல் அதிகாரங்கள் மத்தியப்படுத்தப்பட்ட பின் கட்டியெழுப்பப்பட்ட நிர்வாகத் திட்டத்திற்கு அமைய கீழே காணப்படும் அதிகாரிகள் பொறுப்பாக இருந்த துறைகளைப் பெயரிடுக?

A – பன அதெக     B - நகரவடிக

C- பதகு     D- கொதுறு கேனா

( 4 புள்ளிகள்)

(iii) " மன்னர்களின் செயற்பாடுகளும் அவர்கள் தோற்றம் தர விரும்பிய விதத்தையும் வைத்து அரசுபற்றிய பல்வேறு கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன". அவ்வாறான இரண்டு எண்ணக் கருக்களையும்அவை தோற்றம் பெற்ற விதத்தினையும் உதாரணங்களுடன் விளக்குக?

(5 புள்ளிகள்)

(iv) இந்நாட்டின் அரசாட்சியில் துட்டகைமுனு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளை மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக?

(6 புள்ளிகள்)

4. (i) இலங்கையின் பண்டைய சமூகத்தில் பின்வரும் சொற்பதங்கள் எதனைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டன?

A- எக்தென் சமிய

B- சபாவ

C-மஹாலேகம்     ( 3 புள்ளிகள்)

(ii) கீழே காணப்படும் விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரமாகக் காணப்படும் தொல்பொருள் மூலாதாரத்தினைப் பெயரிடுக?

A – துணி நெய்து வியாபாரம் செய்பவர்களின் சங்கம் ஒன்றின் மூலம் பிக்குமார்களுக்கு குகை ஒன்று தானம் செய்யப்பட்டமை.

B – பெற்றோர்கள் தங்களது புதல்விகளை சமையற்கலையில் நிபுணத்துவம் பெறச் செய்வது பெற்றோரின் பொறுப்பு

C- அபலவலப என்றும் பெயரில் புளி வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரியொருவர் தொடர்பான தகவல்கள் அடங்கப்பட்டுள்ளது.

D- சந்தைக்கு வரும் வண்டிகளிலிருந்து அல்லாது சந்தையைக் கடந்து செல்லும் வண்டிகளிலிருந்தும் வரிசூலிக்கக் கூடாது     ( 4 புள்ளிகள்)

(iii) இலங்கையின் பண்டைய சமூகத்தில் பொருளாதாரத்தில் காணக்கூடிய விசேட அம்சங்களை இரு விடயங்களின் அடிப்படையில் உதாரணத்துடன் விளக்குக?

( 5 புள்ளிகள்)

(iv) மிக நீண்ட பண்டைய சமூகத்தில் கல்வி மற்றும் இலக்கியமும் இரசனையும் எத்தன்மையில் காணப்பட்டது என்பதை மூன்று விடயங்களின் அடிப்படையில் உதாரணங்களுடன் விளக்குக?     ( 6 புள்ளிகள்)

- கீழே A,B,C, யில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையினை எழுதுக?

5. (i) A - இலங்கையின் கற்காலத் தொழினுட்பம் பற்றிய விபரமான அறிவினைப் பெற்றுக் கொள்ள உதவுவது

B- நீரினை வெளியேற்றுவதற்கு ஏற்ற வகையில் சொரபொரவாவியில் செங்குத்தாக காணப்பட்ட கற்றூண்

C- இடி மின்னனில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக ருவன்வெலிசாயாவின் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள இடிதாங்கி அழைக்கபட்ட விதம்

( 3 புள்ளிகள்)



kalvi.lk

(ii) கீழே தரப்பட்டுள்ள குளத்தின் உறுப்புக்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைக் குறிப்பிடுக?

A – கலிங்கல் தொட்டி

B- குளக்கட்டு

C- அலைதாங்கி

D- வெளிவான் கதவு ( 4 புள்ளிகள்)

(iii) வீடமைப்புத் தொழினுட்பம் மற்றும் மட்பாண்டங்கள் தயாரித்தல் போன்றவற்றில் பழைமையான விஞ்ஞான தொழினுட்ப முறை பிரயோகிக்கப்பட்டிருப்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக? ( 5 புள்ளிகள்)

(iv) ஒவ்வொரு இனத்தின் நலன் கருதி செயற்படும் போது பண்டைய சமூகத்தில் காணப்பட்ட உள்நாட்டுச் சம்பிரதாய முறைகள் மூன்றினை விளக்குக? ( 6 புள்ளிகள்)

6. (i) கீழே தரப்பட்டுள்ள இராசதானிகளுக்கு உரிய மன்னர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக?

(8ம் பராக்கிரமபாகு , இரண்டாம் புவனேகபாகு, மூன்றாம் விஜயபாகு, நான்காம் பராக்கிரமபாகு, முதலாம் புவனேகபாகு)

A -கோட்டை

B -தம்பதெனியா

C–கம்பளை ( 3புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னர்களின் ஆட்சிக் காலத்தினைக் குறிப்பிடுக?

A- இராச்சியத்தின் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆரிய சக்கரவர்த்தியின் அதிகாரிகளினால் வரி அறவிடல்.

B- மலை நாட்டு பிரதேச ஆட்சியாளரான ஜோதிய என்பவனின் கிளர்ச்சியை அம்புலுகல குமாரன் மூலம் அடக்கியமை.

C – சந்திரபானு எனும் ஆக்கிரமிப்பாளர் இந்நாட்டை ஆக்கிரமிப்புச் செய்தல்.

D – பஸ்துன் கோறளைப் பகுதியில் சிங்களசங்கய எனும் அரசனுக்கு எதிரான அரசியல்கிளர்ச்சி இடம்பெற்றமை. (4 புள்ளிகள்)

(iii) பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைவதற்கு ஏதுவான காரணங்கள் இரண்டினை உதாரணத்துடன் விளக்குக? (5 புள்ளிகள்)

(iv) இரண்டாவது நகரமயமாக்கலினால் பொருளாதார அமைப்பிலும் கலைகள் கட்டட நிர்மாணங்களிலும் ஏற்பட்ட விசேட அம்சங்களை மூன்று விடயங்களின் அடிப்படையில் உதாரணத்துடன் விளக்குக? ( 6 புள்ளிகள்)

7. (i) A – மலைநாட்டு பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் முதன் முதலான சுயாதீன இராசதானியொன்றை உருவாக்கிய மன்னன்

B- கண்டி இராசதானியில் நாயக்க வம்சத்தின் முதல் மன்னன்

C – ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை ஆக்கிரமிப்புச்செய்த அரசியல் காலப்பகுதி

மேலே A,B,C யில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள்)

(ii) கண்டி இராச்சிய காலத்தில் மன்னனினால் தீர்க்கப்பட்ட வழக்கு வகைகள் நான்கினைப் பெயரிடுக? ( 4 புள்ளிகள்)



kalvi.lk

(iii) முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் மலைநாட்டு ஆட்சியின் சட்டபூர்வத் தன்மையை நிலைநாட்டிக் கொள்வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியத்தில் காணப்பட்ட பொருளாதார அமைப்பினையும் , சமூக அமைப்பினையும் மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக? ( 6 புள்ளிகள்)

## பகுதி iii

8. (i) ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் காணப்பட்ட எழுத்தாளர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள்)

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள கண்டுபிடிப்புக்களை கண்டுபிடித்தவர் யார் என்பதைக் குறிப்பிடுக?

a. புவியீர்ப்பு சக்தி B. புவி கோளவடிவானது
C- அச்சியந்திரம் D. மனித உடலின் குருதிச் சுற்றோட்டம்
( 4 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை உதாரணத்துடன் விளக்குக? ( 5 புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சியின் மாற்றமானது ஐரோப்பாவுக்கு மாத்திரமன்றி இலங்கையிலும் பல்வேறு விதத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியது. இதனை மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக? ( 6 புள்ளிகள்)

Education කල්වි අධ්‍යාපන

9. 1. உரோமப் பண்பாடு வீழ்ச்சியடைந்தன் பின் ஐரோப்பிய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள்)

2. மறுமலர்ச்சிக்காலக் கட்டடக் கலையின் சிறப்பினை எடுத்துக்காட்டும் கட்டங்கள் இரண்டினையும் உலகப் புகழ்பெற்ற ஓவியங்கள் இரண்டினையும் குறிப்பிடுக? ( 4 புள்ளிகள்)

3. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்கள் இரண்டினை விளக்குக? ( 5 புள்ளிகள்)

4. மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினை விளக்குக? ( 6 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

kalvi.lk